1975 அக்டோபர் 23]

எழுநூற்றுச் சில்லரை பேர்கள் பயின்று வருகிறார்கள். ஆகவே, ஆயிரத்து சில்லரை மாணவர்கள் பயின்று வருகிறார்கள். தனியார் துறையிலே அங்கே பெண்களுக்கு என்று தனியாக ஒரு பள்ளி தொடங்கவேண்டுமென்றால் அதற்காக என்று ஐந்து ஏக்கர் நிலமும் அதற்காகப் போடப்படுகின்ற நிபந்தனைகளை நிறைவேற்றுகின்ற தன்மையும் இருக்குமானால் பெண்கள் பள்ளி வைப்பதற்கான நடவடிக்கையை அரசு கவனத்தில் கொள்ளலாம்.

Medicinal Chemistry Research Centre.

*6. *Q*—THIRU N. K. **PALANISAMY**: Will the **Hon.** the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that Medicinal Chemistry Research Centre is functioning in the State; and

(*b*) whether there is any proposal under consideration to open such centres in all districts?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. என். கே. பழனிசாமி: இதுவரையில் நடத்திய ஆராய்ச்சியின் பயன் என்ன? என்ன என்ன விஷயங்கள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன? இதை ஜில்லாக்களுக்கும் விஸ்தரிப்பதன் மூலமாக அங்கேயும் சௌகரியங்கள் ஏற்படுமல்லவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மெடிசினல் கெமிஸ்ட்ரி என்ற மருத்துவம் குறித்த இரசாயன ஆராய்ச்சித் துறை செயல்பட்டு வருகிறது. திறமைபெற்றவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள் சென்னையிலே இரண்டு மூன்று கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், மாநிலக் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர், பொது மருத்துவ மனைக் கல்லூரியைச் சேர்ந்த இரண்டு பேராசிரியர்கள் இவர்கள் இணைந்து சென்னை பொது மருத்துவ மனைக் கல்லூரியில் இந்த ஆராய்ச்சியை நடத்தி வருகிறார்கள். தனி அமைப்பாக இந்த ஆராய்ச்சியை நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, பரவலாக நடத்தப்படக் கூடிய ஒன்று அல்ல இது. இதை நடத்துவதற்கு அதிகத் தேர்ச்சி பெற்றவர்கள் தேவை. இந்த ஆராய்ச்சியின் பலன்கள் மருத்துவக்

கண்டுபிடிப்புகளுக்குப் பயன்படும். அதுவும் முழு அளவுக்கு நடத்துவதற்கான வாய்ப்பும் வசதியும் இல்லை. ஏற்படுத்தப் பட்டிருக்கிற அமைப்பின்மூலம் கிடைக்கின்ற பலன்கள், உண்மைகள் வேண்டுமானால் மருத்துவத் துறையின் வாயிலாகப் பரவக்கூடும்.

சேலம் மாவட்ட மருத்துவ மனையில் சிறப்புப் பிரிவுகள்

*7 வினா—திரு. கி. ஜெயராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட அரசினர் மருத்துவ மனையில் Intensive Coronary Care Unit, Cancer Treatment Care Unit போன்ற சிறப்புப் பிரிவுகளைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சேலம் மாவட்ட மருத்துவ மனையில் Intensive Coronary Care Unit தொடங்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆனால் Cancer Treatment Care Unit தொடங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

Metropolitan Land Bank.

*8 Q.—Thiru B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Health be pleased to state:

(a) whether the Seminar on Metropolitan Development Planning at its meeting around January 1975 have decided to recommend to the State Government to open a Metropolitan Land Bank; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) சென்னையில் 1975 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 6, 7-ஆம் நாட்களில் சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம், சென்னை-செங்கற்பட்டு வட்டார வளர்ச்சித் திட்டம் ஆகியவை குறித்து நடைபெற்ற கருத்தரங்கில் பல பரிந்துரைகள் வழங்கப் பட்டன. பெருமளவில் நிலத்தைக் கையகப்படுத்துதல், அந்நிலத்தை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை நிறைவேற்றும் பொருட்டு நில மேம்பாட்டு வங்கி ஒன்றை ஏற்படுத்த சென்னை